www.padippakam.com

# இடம்பெயர்ந்த பல்கலைக்கழக மாணவர்களின் நியாயமான உரிமைப்போராட்டத்திற்கு ஆதரவளிப்போம்!

1983-ம் ஆண்டு பேராதனையிலும், கொழும்புவிலும், கட்டுப்பெத்தையிலும், அம்பாறையிலும் தமிழ் மாணவர்கள்; திட்டமிட்டு இரவோடிரவாக அடித்து விரட்டப்பட்டதையும் இதன் பின்னர் சிறிலங்காவிலும் தமிழீழத்திலும் தமிழினப் படுகொலை நடைபெற்றதையும் தமிழ் பேசும் மக்கள் மறந்திடமுடியுமா?

சிறிலங்காவில் தமிழ்ப்பள்ளிகள் தீவைக்கப்பட்டு நாசமாக்கப்பட்டதையும் மறந்திடலாமா?

படிக்கவென்று சென்றவர்கள் பாதைகளில் பிணமாகக் கிடந்ததனையும் மறப்போமா?

அடிபட்டும், உதைபட்டும் எதிலிகளாகத் தமிழீழத்திற்கு விரட்டப்பட்ட தமிழினம் நடந்ததை மறந்து மீண்டும் சிறில்ங்கா சென்று கண்டது என்ன? தென்னிலங்கையில் தங்களின் உயிருக்கு எந்த வித உத்தரவாதமும் இல்லாத நிலையில் தங்களின் உயர்கல்வியை தமிழ்ப்பிரதேசங்களில் தொடர்வதற்கு நியாயமான கோரிக்கைகளை முன்வைத்துப் போராடும் இடம்பெயர்ந்த மாணவர்களின் உரிமைப்போராட்டத்திற்கு தமிழீழமக்கள் விடுதலைக் கழகத்தின் மாணவர் அமைப்பு தனது பூரண ஆதரவினை வழங்குகின்றது?

ஆயுதப்போராட்டம் மூலம்தான் எங்கள்மீது சுமத்தப்பட்டுள்ள அனைத்து அடக்குமுறைகளையும் உடைத்தெறியமுடியும் என்ற கருத்தும் கண்ணோட்டமும் வரலாற்று நியதியாகிவிட்ட இவ் வேளையில் இடம்பெயர்ந்த பல்கலைக்கழக மாணவர்களின் நியாயமான உரிமைப்போராட்டத்தையும், தமிழீழ விடுதலைக்காக ஏற்கனவே போராடிக்கொண்டிருக்கும் புரட்சிகர சக்திகளுடன் ஒன்றிணைப்பதன் மூலம்தான் இன்றைய பிரச்சனைக்கு ஒரு நிரந்தரத்தீர்வு காணமுடியும். தமிழ் மாணவர்களினது இப்போராட்டம் மக்கள் போராட்டமாக வளர்த்தெடுக்கப்பட்டு, ஒடுக்கப்பட்ட தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதனூடாகவே தமிழ் மாணவர்களின் உரிமைகளையும் வென்றெடுக்கமுடியும்.

இன்று வெடித்துக்கிளம்பவுள்ள தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு ஒரு விசேட தூண்டுதலாக இருந்தது அன்றைய சிங்கள இனவெறி அரசின் தரப்படுத்தல் கொள்கையாகும். அந்தத் தரப்படுத்தலுக்கெதிராக அன்றைய மாணவர்களது போராட்டமுன்னெடுப்பு புரட்சிகரசக்திகளாகப் பரிணாமம் அடைந்துள்ள இவ்வேளையில், மாணவர்களின் இப்போராட்டமும் மேலும் புரட்சிகர சக்திகளினது போராட்டத்தை வலுவடையச்செய்வதோடு தமிழீழ விடுதலைப்போராட்டத்தின் வளர்ச்சிக்கும் வழிசமைக்கும்.

**இடம்பெயர்ந்த பல்கலைக்கழக மாணவர்களே!** அமைதிப்போரில் குதித்திருக்கும் உங்களுக்கு நியாயம் கிடைக்கும்வரை உங்கள் போராட்டம் தொடரட்டும்.

**பொதுமக்களே!** எமது சக மாணவத்தோழர்களின் உரிமைப்போராட்டத்திற்கு ஆதரவளியுங்கள்

**பெற்றோர்களே!** உங்கள் பிள்ளைகளை மீண்டும் சிறிலங்காவிற்கு அனுப்பி பணயக்கைதிகளாக மாற்றாதீர்கள். பிள்ளைகளின் நியாயமான போராட்டத்திற்கு ஆதரவு நல்குங்கள்.

**மாணவர்களே;** இடம்பெயர்ந்த பல்கலைக்கழக மாணவர்களின் நியாயமான இப்போராட்டம் வெற்றிபெற ஒத்துழைப்பு வழங்கி நமது மாணவசமுதாயத்தின் ஒற்றுமையை நிலைநாட்டுவோம்.

- **வெல்க இடம்பெயர்ந்த பல்கலைக்கழக மாணவர்களின் போராட்டம்**
- **வெற்றிபெறுக தமிழீழ விடுதலைப் போராட்டம்**
- **அனைத்து அடக்குமுறைகளையும் உடைத்தெறிவோம்!**

மாணவர் அமைப்பு,
தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்.

டிசம்பர் 31 - 1983

இத்துண்டறிக்கை தமிழீழ மக்கள் விடுதலைக்கழ மாணவர் அமைப்பினால் அச்சிட்டு வெளிவரப்பெற்றது.

படிப்பகம்